பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 04 2025 — 7 15

புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

2. வலிமையான சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

3. அனைத்து பருவநிலைகளுக்கும் ஏற்ற புதிய பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் இந்த ஆண்டு 500 மாணவர்களுக்கு தொழில்பழகுநர் பயிற்சி அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. தேசிய சீனியர் தடகளப் போட்டியின் போல்வால்ட் பிரிவில் மத்தியப்பிரதேசத்தின் தேவ் மீனா தங்கப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அனந்த்நாக் மாவட்டத்திற்கு உட்பட்ட **Baisaran** என்னும் இடத்தில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், கஷ்மீர் தாக்குதல் மிகுந்த அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் அமெரிக்கா, இந்தியாவிற்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவதில் இந்தியாவுடன் துணை நிற்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ரஷ்யா, ஜெர்மனி, இத்தாலி, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட், ஈரான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இந்த தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதனிடையே கஷ்மீர் நிலவரம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஸ்ரீநகர் சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா உள்ளிட்டோருடன் உயர்மட்ட ஆலோசனை நடத்தியுள்ளார்.

சம்பவ இடத்தை இன்று நேரில் பார்வையிடும் திரு. அமித் ஷா, தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்திக்க உள்ளார்.

<<<<>>>>

வலிமையான சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

பஞ்சாபில் பல்கலைக்கழக நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், இந்திய மாணவர்கள் புதுமைக் கண்டுபிடிப்பு, பன்முகத்தன்மை மற்றும் உலகளாவிய தலைமைப் பண்பு போன்றவற்றை உணர்த்தும் பிரதிநிதிகளாக திகழ்வதாக கூறினார்.

நாட்டின் கல்விமுறை, பாரம்பரிய அறிவாற்றல் மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாற்றத்தை ஏற்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றும் அதேவேளையில், நமது கலாச்சார பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்பது அவசியம் என்றும் திரு. ஓம்பிர்லா குறிப்பிட்டார்.

<<<<>>>>

அனைத்து பருவநிலைகளுக்கும் ஏற்ற புதிய பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் கர்னாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் புதிய பயிர் ரகங்கள் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவிகரமாக இருக்கும் என்றார்.

உற்பத்தி செலவுக்கு ஏற்ப வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியா தற்போது இயற்கை விவசாயத்தை நோக்கி வேகமாக முன்னேறிச் செல்வதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு தொடர்பாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ள புகார்களை தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில்தான் நடைபெறுவதாக கூறியுள்ளது.

இதுகுறித்து யாரேனும் தவறான தகவல்களைப் பரப்பினால் அது சட்டத்தை அவமதிப்பதாக மட்டுமல்லாமல் அவர்களது சொந்த கட்சியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல்களின்போது வெளிப்படையாக அயராது பணியாற்றும் லட்சக்கணக்கான அரசு ஊழியர்களை அவமதிப்பு செய்வதாக அமையும் என்று குறிப்பிட்டுள்ள தேர்தல் ஆணையம், வாக்காளர்களின் தீர்ப்புக்கு பிறகு தேர்தல் ஆணையம் சமரசம் செய்துவிட்டதாக கூறி அவதூறு பரப்ப முயற்சிப்பது முற்றிலும் அபத்தமானது என்றும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தர நிர்ணய நடைமுறைகள் குறித்து இந்த ஆண்டு 500 மாணவர்களுக்கு தொழில்பழகுநர் பயிற்சி அளிக்கப்படும் என இந்திய தர நிர்ணய அமைவனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த அமைப்பின் வருடாந்திர மாநாட்டில் இதனைத் தெரிவித்த அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. பிரமோத் குமார் திவாரி, தர நிர்ணய அமைவனத்தின் பங்குதாரர் அமைப்புகளுடன் இணைந்து இந்தப் பயிற்சி வழங்கப்படும் என்றார்.

நாட்டில் உள்ள 15 கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் தர நிர்ணய நடைமுறைகள் இடம்பெற்றிருப்பதாக கூறிய அவர், தர நிர்ணயம் தொடர்பாக 130க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் திரு. பிரமோத் குமார் திவாரி தெரிவித்தார்.

<<<<>>>>

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதற்கான நாடாளுமன்ற குழுவின் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி புரந்தேஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பிஜேபியைச் சேர்ந்த திருமதி லவ்லி ஆனந்த், அகாலிதள கட்சியின் ஹர்சிம்ரத்கவுர் பாதல், காங்கிரஸ் கட்சியின் குமாரி ஆர். சுதா உள்ளிட்ட மக்களவை உறுப்பினர்கள் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோன்று மாநிலங்களவையில் இருந்து திமுகவைச் சேர்ந்த திருமதி கனிமொழி சோமு உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பதாகதவும் மக்களவை செயலாளர் திரு. உத்பல் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் காவல் உதவி ஆய்வாளர் பணிக்கான புதிய தேர்வுப் பட்டியலை 3 மாதங்களுக்குள் வெளியிடுமாறு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி திரு. சி.வி. கார்த்திகேயன், எந்த விவரமும் தெரிவிக்காமல் வெளியிடப்பட்ட திருத்தி அமைக்கப்பட்ட தற்காலிக தேர்வுப் பட்டியலை ரத்து செய்து உத்தரவிட்டார்.

மேலும் இடஒதுக்கீடு நடைமுறைகளைப் பின்பற்றி புதிய தேர்வுப் பட்டியலை தயாரிப்பதற்கான நடைமுறைகளைக் கண்காணிக்க ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி திரு. பால் வசந்தகுமார் நியமிக்கப்படுவதாகவும் நீதிபதி தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

புதைபடிமம் அல்லாத மின்சார உற்பத்தி 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகா வாட்டாக அதிகரிக்கப்படும் என மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் பந்த்வாரியில் தேசிய சூரியசக்தி நிறுவனத்தில் புதிய ஆய்வகம் ஒன்றை தொடங்கி வைத்துப் பேசிய அவர், சூரியமின்சக்தி குறித்த ஆராய்ச்சி பரிசோதனையில் இந்த ஆய்வகம் உலகளாவிய சிறந்த அமைப்பாக திகழும் என்று கூறினார்.

இந்த மையம் தற்சார்பு மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் தாயில்லாமல் குழந்தைகளை வளர்க்கும் ஆண் அரசு ஊழியர்களுக்கு குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கப்படும் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

சண்டிகரில் இதனைத் தெரிவித்த அம்மாநில நிதியமைச்சர் திரு. ஹர்பால் சிங் பெண்களுக்கு இணையாக இந்த சலுகை வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய சீனியர் தடகளப் போட்டியின் போல்வால்ட் பிரிவில் மத்தியப்பிரதேசத்தின் தேவ் மீனா தங்கப்பதக்கம் வென்றார்.

கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்று வரும் 28வது தேசிய சீனியர் தடகளப் போட்டியின் போல்வால்ட் ஆடவர் பிரிவில் 5 புள்ளி மூன்று ஐந்து மீட்டர் உயரம் தாண்டி அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தனது முந்தைய சாதனையான 5 புள்ளி மூன்று பூஜ்ஜியம் தூரத்தை முறியடித்ததன் மூலம் புதிய தேசிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்தது.

160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி 17 புள்ளி 5 ஓவரிலேயே 2 விக்கெட் இழப்புக்கு 161 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் போட்டியில் ஹைதராபாத் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**